**Source:** *Tamil Murasu,* p4
**Date:** 2 March 2022

# மறதிநோய், மனச்சோர்வு குறித்த புதிய ஆய்வு

மறதிநோய், மனச்சோர்வு ஆகியவற்றின் தொடர்பில் மனநலக் கழகம் புதிய ஆய்வு ஒன்றை நடத்தவுள்ளது. 60 வயதைத் தாண்டியோரிடையே மறதிநோயும் மனச்சோர்வும் ஏற்படுவதை இந்த ஆய்வு ஆராயும். வருங்காலத்தில் மூப்படையும் சமூகத்திற்கான கொள்கைகளை வரையவும் வளங்களைத் திட்டமிட்டுக் கையாளவும் இந்த ஆய்வின் முடிவுகள் வழிகாட்டியாக விளங்கும். மனநலக் கழகம் இரண்டாவது முறையாக இத்தகைய ஆய்வை நடத்துகிறது. இதற்கு முன் 2013ஆம் ஆண்டு கழகம் ஓர் ஆய்வை நடத்தியது.

60 வயதைத் தாண்டியோரிடையே 10ல் ஒருவருக்கு மறதிநோய் இருந்ததும் 27 பேரில் ஒருவருக்கு மனச்சோர்வு இருந்ததும் அந்த ஆய்வில் தெரியவந்தது.

தற்போது நடத்தப்படவுள்ள ஆய்வு, பராமரிப்பாளர்கள் எதிர்நோக்கும் சுமையை ஆராயும். சிகிச்சை பெறாதோரின் விகிதம் உள்ளிட்ட விவரங்களை அறியவும் இந்த ஆய்வு முற்படும்.

'வெல்–பீயிங் ஆஃப் தி சிங்கப்பூர் எல்டர்லி ஸ்டடி' என்றழைக்கப்படும் சிங்கப்பூர் மூத்தோர் நடலவாழ்வு ஆய்வு இம்மாதம் தொடங்கி அடுத்த ஆண்டு ஜூலை மாதம் வரை நடத்தப்படும் என்று மனநலக் கழகம் வெளியிட்ட செய்தி அறிக்கை தெரிவித்தது. சுகாதார அமைச்சு வழங்கும் நிதியில் இந்த ஆய்வு நடத்தப்படும்.

மொத்தம் 6,000 பேர் ஆய்வில் பங்கேற்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களில் 3,000 பேர் மூத்த குடிமக்கள். மற்றவர்கள், ஆய்வில் பங்கேற்கும் மூத்தோர் நியமனம் செய்யும் குடும்பத்தாரும் பராமரிப்பாளர்களும் ஆவர்.

இந்த ஆய்வில் பங்கேற்கும் மூத்தோரில் மூன்றில் ஒரு பங்கினர் 2013ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வில் பங்கேற்றவர்கள். அந்த ஆய்வில் 2,500 மூத்தோரும் 2,400 பராமரிப்பாளர்களும் பங்கேற்றனர்.

மனநலக் கழகம், சுகாதார அமைச்சு, சாங்கி பொது மருத்துவமனை, சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம், 'கிங்ஸ் காலேஜ் லண்டன்' பல்கலைக்கழகம் உள்ளிட்டவற்றைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்களும் வல்லுநர்களும் இந்த ஆய்வை நடத்தும் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.